# திராவிட மாடல் அரசு

97

**பன்னீர் பெருமாள்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**



# துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம்!

## தொழில் முனைவோரைத் தூக்கிவிடும் அரசு!

தொழில்துறை வளர்ச்சி, பல படிகள் முன்னேற்றமடைந்து செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் வரை, நாளுக்கு நாள் வேகம் எடுத்து வருகிறது. இப்படியான காலத்திலும் ‘விஸ்வகர்மா யோஜனா’ என சாதி அடிப்படையிலான குலத் தொழிலுக்குத் திட்டமிடுகிறது ஒன்றிய அரசு.

‘கைவினைத் தொழில்களை ஊக்குவிக்கிறோம்’ என்கிற பெயரில், ஒரு தச்சரின் மகன் தச்சராக நீடித்தால், மானியமும் ஊக்குவிப்பும் கிடைக்கும்’ என்கிறது ஒன்றிய அரசு.

ஆனால் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்று செயல்படும் நம் திராவிட மாடல் அரசு “நாங்கள் சாதி அடிப்படையில் தொழிலை ஊக்குவிப்பதில்லை. எந்தத் தொழிலாக இருந்தாலும், அந்தத் தொழிலில் நவீனத் தொழில்நுட்பத்தையும், அந்தத் தொழில் சிறு குறு பட்டியலில் இருந்தால், அவற்றைப் பெரிய நிறுவனமாக வளர்ப்பதற்கான முதலீடுகளைத் திரட்டவும் வழிவகை செய்கிறோம்” என்ற நோக்கத்துடன் செயல்படுகிறது.

யார் வேண்டுமானாலும், எந்தத் தொழிலிலும் ஈடுபடலாம், அதற்கு சாதி, மதம் தடையில்லை, நகர்ப்புறம், கிராமப்புறம் என்ற எல்லைகளும் இல்லை என்று பாகுபாடுகள் இல்லாமல் தொழில் வளர்ச்சிக்கான சாதகமான சூழலை உருவாக்கிக் கொடுத்து வருகிறது, திராவிட மாடல் அரசு.

தொழில்முனைவோர்களுக்குத், தொழிலில் நவீன நுட்பங்கள் எளிதாகக் கிடைக்கவும், புதியவர்கள் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகளைச் சாத்தியப்படுத்தும் சூழலையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அந்த வரிசையில், நம் திராவிட மாடல் அரசு முன்னெடுத்துள்ள ஒரு புத்தாக்க முயற்சிதான் ‘துல்லிய பொறியியல் மையம்’.

### தென்னிந்தியாவில் முதல் முயற்சி

தொழில்முனைவோர் புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தவும், உருவாக்கவும், வளர்ந்து வரும் தொழில் பிரிவிற்குள் நுழைய வழி வகை செய்ய வேண்டும் என்ற இலக்கோடும், இந்தத் துல்லிய பொறியியல் மையம் செயல்படும். இதற்காகத் தமிழ்நாட்டில் 5 இடங்களில் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பெருங்குழுமம் செயல்படுத்தப்படும் என்றும் நம் முதலமைச்சர் ‘திராவிட மாடல்’ நாயகர் அறிவித்தார்.

முதற்கட்டமாகத் ‘துல்லிய உற்பத்தி பெருங்குழுமம்’ திருமுடிவாக்கத்தில் (Precision Engineering Technology Centre) உருவாக்கப் பட்டுள்ளது. தென்னிந்திய அளவில் முதன்முதலில் தமிழ்நாட்டில்தான் இப்படியான மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள், மின் மற்றும் மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் துல்லிய பொறியியல் பாகங்களை உருவாக்கும் மையமாக (HUB) சென்னை மண்டலத்தில் உள்ள திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை திகழ்கிறது.

இந்த நிலையில்தான் திருமுடிவாக்கத்தில் தொழில்முனைவோர் கூட்டமைப்பினருடன் இணைந்து 47.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 33.33 கோடி ரூபாய் அரசு மானியத்துடன் ‘துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம்’ அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது.





### வளர்ச்சிக்குத் துணைபுரியும் நவீன வசதிகள்

இந்தத் திட்டத்தின் முதல் பகுதியாக 18.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13.33 கோடி ரூபாய் மானியத்துடன் வடிவமைப்பு மையம் (Engineering Design Centre), மறு பொறியியல் பரிசோதனைக் கூடம் (Re-Engineering Lab), 2 X (Additive Manufacturing Centre). மேம்பட்ட பயிற்சி மையம், காப்புரிமை (Patent) பதிவு வசதி மையம், நவீன பரிசோதனை மையம் (Testing Lab) ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

22.11.2024 அன்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களே தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. அவற்றுக்கு ‘துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம்’ பெருந்துணை புரியும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.**

இந்த மையத்துக்காக, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள 14-க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டைச் சங்கத்தினரால் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கு ஊர்தி (Special Purpose Vehicle) அரசு மானியத்துடன் இயக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் பொதுவசதிகளைத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், புத்தாக்கத் தொழில்நிறுவனங்கள், இளம் தலைமுறை பொறியாளர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒட்டுமொத்தமாக இதனை 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, சென்னை மாவட்டத்தில் 25,000-க்கும் மேற்பட்ட தொழில்நிறுவனங்களும், திருமுடிவாக்கம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஆயிரம் தொழில்நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ளவுள்ளனர்.

‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற முழக்கத்தோடு செயல்படும் திராவிட மாடல் அரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள், புதிய கண்டுபிடிப்புகளுக்குப் பெரிய நிறுவனங்களைச் சார்ந்து இருக்காமல், அவர்களே குறைந்த செலவில் உருவாக்கிக் கொள்ளும் வகையில், இந்தத் திட்டத்தை வடிவமைத்துள்ளது.

### மிகக்குறைந்த செலவில், மிகப்பெரிய பலன்

இத்திட்டத்தில் உயர் மென்பொருளைப் (Advanced Software) பயன்படுத்தி வடிவமைப்பதாலும், தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்து வதாலும், நவீன பரிசோதனை வசதிகளைக் குறைந்த செலவில் பெறுவதாலும், உலகத்தரம் வாய்ந்த புதிய கண்டுபிடிப்புகளை மிகக் குறைந்த உற்பத்திச் செலவில் எவ்வித மூலதனமும் இன்றி குறு, சிறு நிறுவனங்களாலும் உருவாக்கிட முடியும்.

இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்ட உயர் தொழில்நுட்பப் பொது வசதி மையம், நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் மற்றும் கல்லூரி மாணவர்களின் எதிர் காலத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

தமிழ்நாட்டில் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் புதிய கண்டுபிடிப்புகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ள இந்தத் திட்டம் அறிவியல் மற்றும் பொறியியல் மாணவர்களிடம் நவீன தொழில்கள் சார்ந்த மென்பொருள்களை உருவாக்கவும் அடித்தளமாக அமையவுள்ளது.

சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களே தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. அவற்றுக்கு ‘துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம்’ பெருந்துணை புரியும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

**...சாதனை தொடரும்**

## இ.டபிள்யூ.எஸ். (EWS)-க்கு போலிச் சான்றிதழா?

‘சமூகநீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கியவர்களுக்கே இடஒதுக்கீடு’ என்ற அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையைப் புறந்தள்ளிவிட்டு, 2019-ஆம் ஆண்டு ஜனவரியில் ‘உயர் சாதி ஏழை’களுக்குப் பொருளாதார அடிப்படையில், 10 சதவிகிதம் இ.டபிள்யூ.எஸ். (EWS) இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியது, பா.ஜ.க. ஒன்றிய அரசு.‘உயர் சாதி ஏழை’களுக்கான இந்த இடஒதுக்கீடு மோசடியானது என்று சமூக நீதிச் சிந்தனையாளர்களும், கல்வியாளர்களும் கூறி வருகின்றனர். இப்போது, இந்த இடஒதுக்கீட்டிலேயே பல்வேறு மோசடிகள் நடப்பது அம்பலமாகியுள்ளது.

‘உயர் சாதி ஏழை’களுக்கான இடஒதுக்கீட்டிற்கு வருமான வரம்பாக ஆண்டொன்றுக்கு ரூ.8 இலட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டது. மாதம் ரூ.60,000 ஊதியம் வாங்குபவர்கள், ஏழைகளா என்ற கேள்விக்கே இன்னும் விடை கிடைக்கவில்லை. ஆனால், இந்த வருமான வரம்புக்கும் அப்பால் இருக்கிற உயர் சாதியினர் பலரும், தனியார் கல்லூரிகளில் இ.டபிள்யூ.எஸ். (EWS) ஒதுக்கீட்டில் மருத்துவ உயர் படிப்புகளில் சேர்ந்துள்ளனர் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

மருத்துவ உயர் படிப்புக்கு, கல்விக் கட்டணமாக 25 லட்சம் ரூபாய் முதல் 90 லட்சம் ரூபாய் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ள சில தனியார் கல்லூரிகளில், இ.டபிள்யூ.எஸ்.(EWS) ஒதுக்கீட்டில் 143 பேர் சேர்ந்துள்ளனர்.

இம்மாணவர்களின் ஒட்டுமொத்த படிப்புச் செலவையும் கணக்கிட்டால், ஒரு கோடி ரூபாயில் இருந்து 2 கோடி ரூபாய் வரை செலவாகக்கூடும். இவர்களின் குடும்ப ஆண்டு வருமானமே 8 லட்சம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கும்போது, 3 ஆண்டுகளில் கல்விக் கட்டணம் மட்டுமே எப்படி 90 லட்சம் ரூபாய் வரை கட்ட இயலும், 2 கோடி ரூபாய் வரை படிப்புக்காக மட்டுமே எப்படிச் செலவிட இயலும் என்பதுதான் இதிலுள்ள முதன்மையான கேள்வி. அப்படியானால், போலிச் சான்றிதழ் பெற்று, 10 விழுக்காடு இடஒதுக்கீட்டை மோசடியாக இவர்கள் பெற்று அனுபவிக்கிறார்களா என்ற சந்தேகம் இதில் தொக்கி நிற்கிறது.

## :ப்ளாஷ்பேக்



### அஞ்சுகம் அம்மையாரின் ஓவியம்!



கோ.புகழரசு

முத்தமிழறிஞர் கலைஞரை உயிருக்கு உயிராக நேசிக்கும் கடைக்கோடித் தொண்டனாக வாழ்வில் ஒரு முறையாவது, அவரைப் பார்த்து வாழ்த்துப் பெறவேண்டும் என்பது என் ஆசை. 2011-ஆம் ஆண்டு சென்னை, ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. (YMCA) மைதானத்தில் அன்றைய தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஜெ. அன்பழகன் அவர்களின் தலைமையில் நடந்த இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாள் விழாவுக்குச் சென்றேன். தலைவர் கலைஞர் அவர்களின் தாயார் அன்னை அஞ்சுகம் அம்மையாரின் திருவுருவத்தை, மெழுகில் ஓவியமாக வரைந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் அன்பளிப்பாக வழங்கி வாழ்த்துப் பெற்றேன். என் வாழ்நாள் கனவு நனவானது.

**- வழக்கறிஞர் கோ.புகழரசு, வழக்கறிஞர் அணி,<br>சென்னை உயர்நீதி மன்றம், காட்டுப்பரூர்,<br>விருத்தாச்சலம், கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### குடிஅரசில் லெனின் நூல்!

1932-ஆம் ஆண்டு ஜூன் மாதம் லண்டன் சென்றிருந்த பெரியாரும் எஸ்.இராமநாதனும் மதம் குறித்து, ரஷ்யப் புரட்சியாளர் லெனின் எழுதிய நூலை வாங்கினர். பயண நாட்களிலேயே அந்நூலைத் தமிழில் மொழிபெயர்க்கும் வேலையைத் தொடங்கி, ‘குடிஅரசு’ இதழில் தொடராக வெளியிட்டார் பெரியார். பின்னர் அது நூலாகவும் வெளிவந்தது.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

677

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131